# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்**:143/மா/**2025**

**நாள்**: **23.07.2025**

| | |
|---|---|
| திரு.T.R. ஸ்ரீநிவாசன்<br>சென்னை 91 | மனுதாரர் |
| மண்டல அலுவலர் மண்டலம் 14<br>பெரு நகர சென்னை மாநகராட்சி | எதிர் மனுதாரர் |

சென்னை 91, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, மனை எண் 86, கதவு எண் 3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திருT.R.ஸ்ரீநிவாசன் என்பவரின் 22.04.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.04.2025 அன்று பெறப்பட்டு 143/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை 91, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, மனை எண் 86, கதவு எண் 3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.R. ஸ்ரீநிவாசன் என்பவர் 22.04.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186ல் பாலாஜி நகர் 19, 24,18,17வது தெரு மற்றும் பாலாஜி நகர் மெயின் சாலைகளில் நல்ல நிலையில் உள்ள பழைய மழைநீர் வடிகால்களில் உள்ள மண் கழிவுகளை தூர்வாரி வடிகால்களில் மழைக்காலங்களில் தண்ணீர் சீராக செல்ல சீர் அமைத்து தருமாறு 03.03.2025ல் மாநகராட்சி ஆணையர் மற்றும் தலைமையிட மழைநீர் வடிகால் துறை, கண்காணிப்பாளர், மண்டலம் 14ன் மண்டல அலுவலர், செயற் பொறியாளர் 1, உதவி செயற் பொறியாளர் (மழை நீர் வடிகால் துறை) மற்றும் வார்டு 186ன் உதவி பொறியாளர் ஆகியோரிடம் மனு வழங்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடம் கண்காணிப்பு பொறியாளர் மழைநீர் வடிகால்துறை சென்னை 3 அவர்கள் ம.நீ.வ.து.ந.க.எண் அ4/0682/2025 நாள் 09.03.2025ல் பதில் வழங்கினார். அதில் தாங்கள் வைத்துள்ள கோரிக்கையானது மண்டலம் 14ன் மூலம் மேற்கொள்ளப்படுவதால், இம்மனு மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மண்டலம் 14க்கு அனுப்பப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

இது குறித்து மண்டலம் 14ன் மண்டல அலுவலர், செயற்பொறியாளர்–1, உதவி செயற்பொறியாளர் (மழைநீர் வடிகால்துறை) மற்றும் உதவி பொறியாளர் ஆகியோரை நேரில் சந்தித்து முறையிட்டதன்படி செயற்பொறியாளர் 1 அவர்கள் இடத்தினை 24.03.2025ல் நேரிடையாக

கள ஆய்வு செய்து, பாலாஜி நகர் 19,24,18,17 மற்றும் பாலாஜி நகர் மெயின் சாலைகளில் நல்ல நிலையில் உள்ள பழைய மழைநீர் வடிகால்களை அளவீடு செய்து, திட்ட மதிப்பீடு தயாரித்து, மண்டலம் 14ன் வருகின்ற ஏப்ரல் மாதாந்திர கூட்டத்தில் பொருளாக வைத்து, தீர்மானம் நிறைவேற்றி மாநகராட்சி வளர்ச்சி நிதியில் உடனடியாக பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

ஆனால் மண்டலம் 14ன் அதிகாரிகள் மேற்கண்ட தெருக்களில் உள்ள பழைய மழைநீர் வடிகால்களை தூர்வாரி சீரமைத்திட அளவீடு செய்து திட்ட மதிப்பீடு தயாரித்து செயலாக்கம் செய்யவில்லை. 09.04.2025 அன்று நடைபெற்ற மண்டலம்14ன் வார்டு குழு கூட்டத்திலும் இப்பொருள் வைக்கப்படவில்லை. எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேற்குறிப்பிட்டுள்ள தெருக்களில் உள்ள பழைய மழைநீர் வடிகால்கள் 2024 பருவமழைக்கு முன்னர் தூர்வாரி சுத்தம் செய்யப்பட்டதா என தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் 18.02.2025 மனுவில் கோரிய கேள்விக்கு மேற்க்காணும் தெருக்களில் உள்ள பழைய மழைநீர் வடிகால்களில் உள்ள மண் கழிவுகள் 2024ஆம் ஆண்டு பருவமழைக்கு முன்னர் சுத்தம் செய்யப்பட்டது என பொது தகவல் அலுவலர், செயற் பொறியாளர் 1, பொய்யான தவறான தகவலை மனுதாருக்கு வழங்கி உள்ளார். (மனு மற்றும் பதில் கடிதம் இணைக்கப்பட்டுள்ளது) உண்மையில் எந்தப் பணியும் மண்டலம் 14ன் மாநகராட்சி அதிகாரிகள் வடிகால்களை தூர்வாரி சுத்தம்செய்யவில்லை என்பதையும் நடுவர்அவர்களின் கனிவான கவனத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மனுவில் குறிப்பிட்டுள்ள தெருக்களில் உள்ள பழைய மழைநீர் வடிகால்களை தூர் வராததால், மழைநீர்வடிகாலில் செல்லாமல் சாலைகளில் ஒவ்வொரு பருவ மழைக்கும் வெள்ளமாக தேங்குகிறது. இதனால் இப்பகுதியில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் அனைவரும் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகிறோம். குறிப்பாக பருவ மழைக்காலங்களில் பாலாஜி நகர் 21, 23வது தெருக்களில் மூன்று அடிக்கும் மேல் மழைநீர் தேங்குகிறது. இதனால், தரைத்தளத்தில் வசிப்போரின் வீடுகளில் மழைநீர் புகுந்து, சோபா, பீரோ, கட்டில், மெத்தை மற்றும் தண்ணீர் இறைக்கும் மோட்டார் அன்றாடம் உபயோகப்படுத்தும் சாமான்கள் அனைத்தும் பழுதாகி, பொருளாதார இழப்பும் ஏற்படுகின்றது. இதனால் வயதில் முதியவர்களுக்கு மிகுந்த மன வேதனையும் சிரமங்களும் உண்டாகிறது. மேற்குறிப்பிட்ட பாதிப்புகள் குறித்து மண்டலம் 14ன் மாநகராட்சி அதிகாரிகளுக்கு நன்கு தெரிந்தும், மழைநீர் வடிக்கால்களை தூர் வாரிட எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

பெருமதிப்பிற்குரிய தமிழ்நாடு உள்ளாட்சி முறை மன்ற நடுவர் அவர்கள் எனது இந்த மனுவினை கருணையுடன் பரிசீலனை செய்து விசாரணைக்கு ஏற்று, விசாரணை தேதி அளித்து, விசாரணை செய்து வருகின்ற 2025 பருவ மழைக்கு முன் மனுவில் குறிப்பிட்டுள்ள தெருக்களில் உள்ள பழைய மழைநீர் வடிகாலில் உள்ள மண் கழிவுகளை அகற்றி மழைநீர் வீராங்கல் கால்வாயை நோக்கி சென்றடையும் வகையில் தூர் வாரி சுத்தம்செய்திட மண்டலம் 14ன் மே மாதம் மாதாந்திர கூட்டத்தில் இதனை பொருளாக வைத்து தீர்மானம் நிறைவேற்றி, மாநகராட்சி வளர்ச்சி நிதியில் உடனடியாக பணிகளை துவங்கிட உதவிடுமாறும், அதற்கான உரிய ஆணை பிறப்பித்து உத்தரவு வழங்கிடுமாறும் பணிந்து வணங்கி வேண்டுகிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 12.5.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14ன் மண்டல அலுவலர் கடிதம் ம.அ.14 ந.க. எண் அ10/4078/2025 நாள் 1.7.2025–ன் அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186 (புழுதிவாக்கம்)ல் உள்ள 17, 19, 24வது தெரு ஆகிய தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களை தூர்வார மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மேலும் பருவமழைக்கு முன்னர் தூர்வாரி மழைநீர் சீராக செல்ல வழிவகை செய்யப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.07.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 03.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அதில்–

"சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186ல் பாலாஜி நகர் 19, 24, 18, 17வது தெரு மற்றும் பாலாஜி நகர் மெயின் சாலைகளில் நல்ல நிலையில் உள்ள பழைய மழைநீர் வடிகால்களில் உள்ள மண் கழிவுகளை தூர்வாரி வடிகால்களில் மழைக்காலங்களில் தண்ணீர் சீராக செல்ல முறையிட்டதன்படி செயற்பொறியாளர் அவர்கள் இடத்தினை 24.03.2025ல் நேரிடையாக கள ஆய்வு செய்து, பாலாஜி நகர் 19, 24, 18,17 மற்றும் பாலாஜி நகர் மெயின் சாலைகளில் நல்ல நிலையில் உள்ள பழைய மழைநீர் வடிகால்களை அளவீடு செய்து, திட்ட மதிப்பீடு தயாரித்து, மண்டலம் 14ன் வருகின்ற ஏப்ரல் மாதாந்திர கூட்டத்தில் பொருளாக வைத்து, தீர்மானம் நிறைவேற்றி மாநகராட்சி வளர்ச்சி நிதியில் உடனடியாக பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

மனுவில் குறிப்பிட்டுள்ள தெருக்களில் உள்ள பழைய மழைநீர் வடிகால்களை தூர் வாராததால், மழைநீர் வடிகாலில் செல்லாமல் சாலைகளில் ஒவ்வொரு பருவ மழைக்கும் பாலாஜி நகர் 21, 23வது தெருக்களில் மூன்று அடிக்கும் மேல் மழைநீர் தேங்குகிறது. இதனால் தரைத்தளத்தில் வசிப்போரின் வீடுகளில் மழைநீர் புகுந்து, சோபா, பீரோ, கட்டில், மெத்தை மற்றும் தண்ணீர் இறைக்கும் மோட்டார், அன்றாடம் உபயோகப்படுத்தும் சாமான்கள் அனைத்தும் பழுதாகி, பொருளாதார இழப்பும் ஏற்படுகின்றது. இதனால் வயதில் முதியவர்களுக்கு மிகுந்த மன வேதனையும் சிரமங்களும் உண்டாகிறது. மேற்குறிப்பிட்ட பாதிப்புகள் குறித்து மண்டலம் 14ன் மாநகராட்சி அதிகாரிகளுக்கும் நன்கு தெரிந்தும், மழைநீர் வடிக்கால்களை தூர் வாரிட எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை மழைநீர் வடிகால் துறை நிதி ஒதுக்கிட தயாராக இருந்தும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் அலுவலகத்தால் இதுவரை திட்ட மதிப்பீடு தயார் செய்து அனுப்பவில்லை.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் அவர்கள் எனது இந்த மனுவினை கருணையுடன் பரிசீலனை செய்து விசாரணைக்கு ஏற்று, விசாரணை தேதி அளித்து, விசாரணை செய்து வருகின்ற 2025 பருவ மழைக்கு முன் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் மனுவில் குறிப்பிட்டுள்ள தெருக்களில் உள்ள பழைய மழை நீர் வடிகாலில் உள்ள மண் கழிவுகளை அகற்றி மழைநீர் வீராங்கல் கால்வாயை நோக்கி சென்றடையும் வகையில் தூர் வாரி சுத்தம் செய்திடும் வகையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், நிர்வாக அனுமதி பெற்று, மண்கழிவுகள் அகற்றி மழைநீர் சீராக செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என மாநகராட்சி மண்டல அலுவலரின் 15.04.2025ல் கடிதத்தில் தெரிவித்துள்ளார். அதன்படி வளர்ச்சி நிதியில் உடனடியாக பணிகளை துவங்கிட அதற்கான உரிய ஆணை பிறப்பித்து உத்தரவு வழங்கிடுமாறும் இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிந்து வணங்கி வேண்டுகிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் உதவிப்பொறியாளர் 03.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அதில்–

“பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186 (புழுதிவாக்கம்)ல் உள்ள 17, 19, 24 வது தெரு ஆகிய மூன்று தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வார மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வரும் 07.07.2025 அன்று வார்டு கமிட்டி கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெறப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் தூர்வாரும் பணி உடனடியாக மேற்கொள்ளப்படும்.

மேலும் மேற்கண்ட பணி இவ்வருட பருவ மழைக்கு முன்னர் தூர் வாரி மழைநீர் சீராக செல்ல வழிவகை செய்யப்படும் என்பதை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.” எனத் தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரின் அறிக்கை, மற்றும் உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14, வார்டு 186ல் பாலாஜி நகர், 17, 18, 19 மற்றும் 24 வது தெருக்கள் மற்றும் பாலாஜி நகர் மெயின் சாலையில் உள்ள பழைய மழைநீர் வடிகால்களில் உள்ள மண் கழிவுகளை தூர்வாரி வடிகால்களில் மழைக்காலங்களில் தண்ணீர் சீராக செல்ல வழிவகை செய்யுமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடம், மழைநீர்வடிகால்துறையிடம் முறையிட்டதன் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் அலுவலர்கள் மேற்கண்ட இடங்களை கள ஆய்வு செய்து மழைநீர் வடிகால்களை அளவீடு செய்து, திட்ட மதிப்பீடு தயாரித்து, வருகின்ற ஏப்ரல் மாதாந்திர கூட்டத்தில் பொருளாக வைத்து, தீர்மானம் நிறைவேற்றி மாநகராட்சி வளர்ச்சி நிதியில் உடனடியாக பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தவாறு, இதுநாள் வரை மேற்படி பணிக்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் அலுவலகத்திற்கு உரிய உத்திரவினை வழங்குமாறு கோரியுள்ளது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186 (புழுதிவாக்கம்) பாலாஜி நகரில் உள்ள 17, 19, 24 வது தெரு ஆகிய மூன்று தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வார மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வரும் 07.07.2025 அன்று வார்டு கமிட்டி கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெறப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும் என்பது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186 (புழுதிவாக்கம்) பாலாஜி நகரில் உள்ள 17,19,24 வது தெருக்களில் உள்ள பழைய மழைநீர் வடிகால்வாய்களை தூர் வார மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் வார்டு கமிட்டி கூட்டத்தில் வைக்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டவுடன் பருவமழைக்கு முன்னர் தூர்வாரி மழைநீர் சீராக செல்லும் வகையில் பணி மேற்கொள்ளப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையிலும், உதவிப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்தவாறு, உரிய நடவடிக்கை எடுக்குமாறும், மேலும், மனுதாரர் கோரியவாறு மண்டலம் 14, வார்டு 186 (புழுதிவாக்கம்) பாலாஜி நகரில் உள்ள 18வது தெருவினை

நேராய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள்23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு T.R. ஸ்ரீநிவாசன்,
மனை என் 86, கதவு எண் 3/2
பாலாஜி நகர், 23வது தெரு,
புழுதிவாக்கம்,
சென்னை 91.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 6/64 புழுதிவாக்கம் பிரதான சாலை,
சென்னை 600 091.

(4) கண்காணிப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodel Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600003.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.